குமரகுருபரன்



மலர் 16] 1965-ஆம் ஆடி-மீ 1-ம்உ (16—7—65) [இதழ்

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. [illegible]

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.,
அசிஸ்ட்டண்டு கமிஷனர்
H. R. & C. E. (Adm) Dept. Ramanad at Madura-2
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 16	விசுவாவசு-ஆ ஆடித் திங்கள் 1-ம் உ [16–7–65]	இதழ் 7

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 14)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

தில்லையில் வாழ்நர் நடராசப் பிரானார். தில்லை என்றது சிவனார். சிதம்பரம் என்பது சிவாலயம். மதுரை சிவனார். ஆலவாய் சிவாலயம், திருவாரூர் + பூங்கோயில், மயிலார்ப்பூர் + கபாலீச்சரம் முதலிய பல இவ்வாறுள்ளன. தில்லைவாழ்நர், மன்ற வாழ்நர், அம்பலவாழ்நர் முதலியவை தில்லைவாணர், மன்ற வாணர், அம்பலவாணர் என மருவிவழங்குதல் வெளிப்படை. வீழ்நர் என்பது வீணார் என மருவியது போல்வது; அரசி +

ஆள்+ந்+இ= அரசாணி; அரசாள்பவள். அல்லியரசாணி. ஆள்+இ=ஆளி. அறிவாளி என்று ஆண்பாலை யுணர்த்துவது அறிக. ஆணி என்று பெண்பாலை யுணர்த்துவது காண்க.

தில்லைவாணர்க்குச் சிவகாமவல்லியம்மை வாழ்க்கைத் துணைவியாக வாய்த்ததால் நலம்பல உள வாயின. எல்லாரையும் தோற்கச் செய்து வெற்றியே பெற்றிருந்த காமதேவனைச் சிவ பிரான், தன் நெற்றிக் கண்ணெருப்புக்கு இரையாக்கி, அவனை அக்கினி தேவனுக்கிவிட்டான். அவன், முன்னரே காமாக்கினி தேவன் தான். பின்னரும் இறைவனது கண்ணெருப்பால், தூமாக்கினி தேவனுனன். மன்மதனை வென்றவர் காமத்தைக் கடந்தவரே. சிவனே காமத்தைக் கடந்த பரமயோகியாயிருந்து, மன்மத பாணத்தால் சிவகாமவல்லி யோகியானுன். வானவர், மானவர், தானவர் முதலோர்க்குத் தன் பாணத்தால் காமம் விளைவிப்பானே அன்றி மாய்வானல்லன் மன்மதன். சிவபிரான் அக்கிநி வண்ணன். அவனுக்குக் காமாக்கிநியைச் சேர்த்து (அக்நியை)ப் பெருக்கினுல், பொறுப்பார் ஆர்? அவ்வக்கிநியே அக்காமனை அக்காமனைக்கு அனுப்பிவிட்டது. இங்கு இவ்வண் ணம் காமதகனம் செய்து வெற்றியுற்ற விமலனுக்கு எது துணை அதுபெற? வாழ்க்கைத் துணை நலம் ஒன்றே துணை.

அதனுல், வாய்ந்தது நின்மனை வாழ்க்கை என்றே, தில்லை வாணர், அம்மே! காய்ந்தது வென்றிவிற் காமனையே' என்ருர் ஆசிரியர். 'அம்மே' என விளித்தது பாட்டுடைப் பிராட்டியாகிய சிவகாமியம்மையை, காமனையே என்றதில் ஏகாரம் எதனை விளக்கிற்று? எல்லாவுயிர்களையும் காயும் காமனையே தில்லை வாணர் நின் வாழ்க்கைத் துணைமை வாய்க்கப் பெற்றுக் காய்ந் தார் என்றவாறு. 'எமனையே பலாஹாரம் செய்யும் பேர்வழி' என்றதிலுள்ள ஏகாரம் போல்வது அது.

கங்கை பெருகிவரின் அதைத்தடுக்க வல்லாரும் உளரோ? அதன் வேகத்தைத் தன் சடைமுடி நுனியால் தடுத்த வலிமை சிவனுக்கே அன்றி மற்று எவனுக்கேனும் உண்டோ? அவ் வலிமை அவனுக்கு எதனுல் உண்டாயிற்று? சிவகாமியம்மை துணையால்தான். அதனுல், கங்கையை முடி(யிற்) பின் வேய்ந் தது என்ருர்.

தக்க யாகத்தில், சந்திரன் பட்டபாடு யார் பட்டார்?'' தடுத்தகுலப் பொருப்பை முடித் தடத்துடையத் தகர்த்தே உடுத் தொடையற்றழைத்து நிலத்துழைப்ப உதைத்துகைத்தே'' (தக்கயாகப் பரணி. 484) ''நிழற் கடவுட் சுடர்த் தொகையைத் திரைத்து நிலத்தரைத்தே' (ஷி. 487) என்றதன் உரையில், திரைத்து :— சந்திரன் நெடியன் ஆதலின் அவனை மடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. நிலத்து அரைத்ததற்கு அடையாளம் களங்கம் என்றுள்ளதை அறிதல் நன்று. மணிவாசகர் 'சந்திரனைத் தேய்த்தருளி' என்றருளினர். தணிகைப்புராணத்திலே களவுப் படலத்திலே மதியெழல்கண்டு கதிசெலல் என்றற்றுறையிலே,

"தண்பாற் பெருங்கடல் நற்றுயுடன் பிறந்தாரமிழ்து
மண்பாற் பரவுந்திருவும் அமிழ்த கலைவடிவும்
விண்பாற் கதியென்ன வெண்டிங்கள் வெப்பந் தரினும் நன்றே
கண்பாற் கழற்கழலான் கண்ட நின்னுருக் காட்டி நில்லே''

என்று கச்சியப்ப முனிவர் அருளிய நயத்தையும் இங்கே கருதிக் களிக்க வேண்டும்.

குமரகுருபர சுவாமிகள், இப்பாடலில், ''பாவம் நின் மென் பதம் தாக்க அவ்வெண்மதியும் தேய்ந்தது'' என்ருர்கள். இவ்விடத்தில் 'மென்பதம் தாக்க' என்ற குறிப்பு உணர்ந்தால் அன்றி விஷயம் விளங்காது. 'காதலனும் காதலியும் பாதமுடி மோதலுறும் சீதவணையில்' ஆதி பகவன் ஊடல் தணிக்கப் பணியவும் அவன் தலையில் ஆதி பகவதி பாதம் தாக்கிற்று. அப்போது அப் பகவன் முடியில் இருந்த அவ்வெண்மதியும் தேய்ந்தது. சிவனும் தக்க யாகத்தில் அம்மதியை காலால் தேய்த்தான், சிவையும் காதற் போரில் காலால் தேய்த்தாள். வெண்மதி தேய்ந்த வேளையில் அப்பெருமானது முடிமிசைக் குடிகொண்ட கங்கையென்னும் பெண்மதி என்ன படுமோ? யார் அறிவார்? வெண்மதி விரகதாபத்தை மட்டும் வளர்க்கும். அப் பெண்மதி சிவகாமவல்லியின் கூடலையே கெடுப்பது அன்றே? அதனல் வெண்மதிக்கு உண்டாக்கும் துன்பத்தினும் அப்பெண் மதிக்கு உண்டாக்கும் துன்பம் மிகப் பெரிதாயிருக்கும் அன்றே?

சிறு நுதலாளாயினும் பெருந்துன்பம் உறுவாள் என்றபடி. வெண்மதி தேய்தல் மட்டும் உற்றது. வெண்மதி தேய்வது ஒன்றோ உறும்? என்னபடுமோ? அப்பாட்டை ஆசிரியரோ அயலாரோ அறியவல்லர் அல்லர்.

'பாவம்' என்றது கவியின் இரக்கத்தைக் குறித்து நின்ற சொல். நின் மென்பதம் பாவ வெண்மதியும் தேய்ந்தது என்றும் நின்மென்பதம் தாக்கப் பெண்மதி என்படுமோ அச் சிறு நுதற்கே' என்றும் இயைத்துக் கொண்டுரைத்தலும் கூடும். (பா. 14,16 பார்க்கின், இப்பாடற் பொருட் குறிப்பு ஒரு சிறிது புலப்படும்).

"வாய்ந்தது நின்மனை வாழ்க்கை என்றே தில்லை வாணர்அம்மே
காய்ந்தது வென்றிவிற்காமனையே முடிக் கங்கையைப்பின்
வேய்ந்தது பாவநின் மென்பதம் தாக்க அவ் வெண்மதியும்
தேய்ந்தது பெண்மதி என்படுமோஅச் சிறுநுதற்கே"

(தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை, 12)

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 6-ன் தொடர்ச்சி

How Yoga leads to Supreme Consciousness

யோகநெறி சிவபோதத்தை அளிக்கின்றது

74. ஆதார சோதனையால் நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலாந்தத்து விண்ணொளி;
போதாலயத்துப் புலன், கரணம், புந்தி
சாதாரணம் கெடலாம் சகமார்க்கமே.

Through this path of Sahamarga
The Yogis pierce the adharas
And the Nadis, they purify;
Envision thus the Kalas sixteen,
And glimpse their heavenly radiance:
And then are they merged in consciousness Supreme
– Their organs of sense, internal and external, all atrophied

சகமார்க்க நெறியால் யோகிகள் ஆதார சோதனை செய்து, நாடி சுத்தி பெற்று, மேதை முதலாய பதினாறு கலைகளையும் கண்டு, அதனில் தோன்றும் விண்ணொளியையும் தரிசித்து,

புறக்கரணங்களும் அகக்கரணங்களும் தம்மியல்புகெட, சிவ போதத்தில் ஒன்றப்பெறுகின்றனர்.

குறிப்புரை: வரி. 1 ஆதார சோதனையாவது, முன்னே 71 வது பாட்டில் குறிப்பிட்ட துவாதச மார்க்கமாகும்.

நாடிசுத்தி – பிராணயாமப் பயிற்சியால் வருவது.

வரி: 2 மேநாதிகலைகளாவன: மேதா, ஆர்க்கிச, விச, விந்து, அர்த்தசந்திர, நிரோதி, நாத, நாதாந்த, சத்தி, வியாபினி, வியோம ரூபி, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனை எனப் பதினாறும். இப்பதினாறு கலைகளையும் தரிசத்தலை சோடச கலாப்பிரசாதயோகம் என்பர்.

இந்தப் பாட்டு பின்னே ஏழாந்தந்திரத்துள்ளும் வருகின்றது. ஆங்கு இதனை விரிப்போம்.

How the Yogi sees Siva in his thoughts

யோகி சிவனைச் சிந்தையுள் காணுமாறு

75. பிணங்கி நிற்கின்றவை ஐந்தையும் பின்னை
அணங்கி எறிவன்; அயிர்மன வாளால்;
கணம்பதி னெட்டும் கருதும் ஒருவன்
வணங்க வல்லான் சிந்தை வந்து நின்றானே.

He harries and subdues the conflicting senses five,
With the sharp sword of his determinate will;
In his thought emerges the Lord
That the eighteen *ganas* seek;
Verily, the yogi deserveth our obeisance.

சகமார்க்கத்தில் நின்றிடும் யோகியானவன், மாறுபடும் புலனைந்தினையும் தன் சிந்தனையென்னும் கூரியவாளால் வருத்தி அடக்குகின்றான்; பதினெண் கணங்களும் தேடும் ஒப்பற்ற இறைவன் அவன் சிந்தனையை நாடி வருகின்றான்; அவனே வணங்குதற் குரியவன்.

குறிப்பு: வரி. 4 "வணங்க வல்லான்" என்பதை இறைவனுக்கு மற்றொரு அடைமொழியாகவும் கொள்ளலாகும்.

But unless the Yogi adores Him not in Love, he seeth Him not

76. வளங்கனி யொக்கும் வளநிறத்தார்க்கும்
வளங்கனி யொப்பதோர் வாய்மையனுகும்;
உளங்கனிந்து, உள்ளம் உகந்திருப்பார்க்கு
பழங்கனிந்து உள்ளே பகுந்து நின்றுனே.

Even for the yogi austere
Who attains the glossy hue of the rich ripe fruit.
The Lord is hard of shell like the Vila *fruit;
But to them whose hearts ripe in love,
And taste the sweets of divine rapture,
He opens all of Himself
Unto a rich fruit mature.

பழுத்து முதிர்ந்த வளமார்ந்த கனியை யொப்ப நெடுநாள் யோகப்பயிற்சியால் உடல் ஒளி பெற்றவருக்கும், இறைவன் விளாங்கனி போன்ற இறுக்கத்தையுடையவனுகவே இருப்பான்; ஆனுல், உள்ளம் உருகி, ஆன்ம இன்பத்தில் திளைத்திருப்ப வர்க்கு கனிந்த பழம் பிளந்து நின்றது போல, எளிமையும் இனி மையும் கொண்டு காட்சி அளிக்கின்றுன்.

(தொடரும்)

* Wood - apple

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 6-ன் தொடர்ச்சி)

மைவிழிச் செங்கமல வல்லிக்கு நேமியான்
மணிமார்பு வாணிக்குநான்
மறைமுதலி செந்நாத் தடந்தைய லாளொடும்
வயித்தியக் கடவுளர்க்கு
மெய்விரிக் குந்தொண்ட ருள்ளத் தடத்திநெடு
வேதச் சிரங்கடுப்ப
வேதபுரி கந்தபுரி புள்ளூ ரெனப்பொலியும்
வேளூர திசைதிசைதோறும்
கைவகுத் தரமகளிர் குரவையாட் டயர்பெருங்
கயிலைத் தடஞ்சாரலும்
கனகாச லத்தும்வள ரிமயா சலத்துமுயர்
கந்தமா தனவெற்பெனத்
தெய்வதப் பிடியொடும் விளையாடு மழகளிறு
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (15)

கருவிழியை யுடைய செங்கமல வல்லியாகிய திருமகளுக்குச் சக்கரா யுதத்தையுடைய திருமாலினது அழகிய மார்பும், கலைமகளுக்கு நான்மறை முதல்வனான பிரம தேவனது சிவந்த நாக்கும், பெரிய தையல் நாயகியுடன் வயித்தியநாதக் கடவுளுக்கு உண்மையை விரித்துணர்த்துகின்ற திருத் தொண்டர்களது உள்ளத் தடத்தோடு வேதச் சிரமும் இடங்களாக இருப்பது போன்று, வேதபுரி, கந்தபுரி, புள்ளூர் எனப்

பெயர் விளங்குகின்ற வேளூரை இடமாகக் கொண்டிருப்பவனே! எட்டுத் திசைகளிலும் பிரிவு செய்து கொண்டு தேவப் பெண்கள் கைகோத்து விளையாடுகின்ற பெரிய கயிலைமலைச் சாரலிலும் கனக மயமாகிய மேடு மலையிலும் வளருகின்ற இமய மலையிலும் உயர்ந்த கந்தமாதன மலையிற்போல் தெய்வ யானையோடு விளையாடுகின்ற இளங்களிறே! செங்கீரை ஆடி அருளுவாயாக! செத்துப் பிறக்கின்ற தெய்வங்களுக்கு மணவாளனே! செங்கீரை ஆடி அருளுவாயாக!

மீனேறு குண்டகழி தீவாய் மடுத்ததனி
வல்லியா ரிளவலோடும்
விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை
வெள்ளமென வீற்றிருக்கும்
ஆனே றுயர்த்திட்ட வையற்கு மம்மைக்கும்
அருமருந் தாகிநின்ற
ஆதிப் பிரானென்று மும்முதற் கடவுளும்
அடித்தொழும் பாற்றமற்றக்
கூனேறு மதிநுதற் தெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந் தவடொண்டைவாய்த்
தேனூறு கிழவிக்கு வாயூறி நின்றவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (16)

மீன்கள் உலாவுகின்ற ஆழமான கடலை வற்றும்படி செய்த ஒப்பற்ற கோதண்டத்தை ஏந்தியவனாகிய இராமபிரான் இளவலாகிய இலக்குமணனோடும் வந்து விதிமுறைப்படி வணங்கச் சடாயுபுரியில் கருணை வெள்ளமென வீற்றிருந்தருளு கின்ற விடையேற்றை கொடியிலே உயர்த்திய தலைவனாகிய வயித்திய நாதக் கடவுளுக்கும் தையல் நாயகி அம்மைக்கும் அருமையான அமுதத்தைப் போல எழுந்தருளியிருக்கின்ற தலைமைப் பெருமானென்று நான்முகன் திருமால் உருத்திரனாகிய மூன்று முதற்கடவுளரும் திருவடித் தொண்டு செய்து

கொண்டிருக்க, அந்த வளைவு பொருந்திய பிறைத் திங்களை ஒத்த நெற்றியை யுடைய தெய்வத் தன்மை பொருந்திய குறப் பெண்ணாகிய வள்ளி நாயகியது குறிப்பை அறிந்து, அவ ளருகிலே சென்று 'உனக்குக் குற்றேவல் செய்வதற்குக் கட்டளை இடுவாயாக!' எனக் குறையிரந்து, அவளது கொவ்வைக் கனி போன்ற வாயிலிருந்து வெளிவரும் தேன் போன்ற சொற் களுக்கு மிக விருப்பங் கொண்டு நின்றவனே! செங்கீரை ஆடி அருளுவாயாக! செத்துப் பிறக்கின்ற தெய்வங்களுக்கு மணவாளனே! செங்கீரை ஆடி அருளுவாயாக!

(தொடரும்)

இராக மாலிகை (பியாகடை, தன்யாசி) தாளம் : ஆதி

பல்லவி

உன்புகழ் பாடியும் என்மேல் இரங்கிட
இன்னமும் தாமதமேன்—அருள்தர (உன்)

பல்லவி

வன்னமயிலில் வள்ளி தெய்வானையுடன் என்றும்
மின்னும் வடிவேலுடன் மிளிரும் பொற்பாதனே (உன்)

சரணங்கள்

1. அஞ்சேல் என்று உந்தன் அபயகரத்தைக்காட்டி
தஞ்சம் புகுந்தவரைத் தாங்கிடத் தரணியில்
செந்தூரில் அமர்ந்து அழகுடன் திகழ்ந்திடும்
கந்தனே சிவ சண்முகனே குகனே (உன்)

2. பொற்பாத கமலத்தைப் போற்றிடநான் மறவேன்
நற்றவம் தொழுதிடும் நாதனே நான்பணிந்தேன்
சிற்சபை தன்னிலே சிவநடனம் புரியும்
வற்றாத அருள்கழலோன் மகிழ் பாலனே (உன்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

திருவண்டப் பகுதி

திரு. சா. ப. சபாரத்தினம், எம். ஏ., பி. எஸ். சி.,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி. கோவை-1.

மலர் 16. இதழ் 6-ன் தொடர்ச்சி

இருவகை உணர்ச்சி :

திருவாசகத்துப் பொதிந்தொளிரும் செழும் பாடல்களிற் கிளரும் உணர்ச்சியை இருகூறுபடுத்தித் துய்க்கலாம். ஒரு வகைக் கூற்றில் இன்பவெள்ளம் பெருக்கெடுக்கும்; சுழித்தும் கொழித்தும் விரைந்தோடும். அவ்வெள்ளத்தின் தாக்குதலுக்கு ஒரோவமயங்களில் நம்மனோர் உள்ளம் ஆற்ருமற் போவதும் உண்டுகாண்! தாக்குதலின் போழ்துள்ள மனநிலையை விண்டு ரைத்தலும் இயலாது, இன்பம் அகத்தின்பாற்பட்டதாகலின். இன்னொருவகைக் கூற்றில் பிரிவுத் துன்பம் தோய்ந்து கிடக்கும். துன்பத்துள் துன்பம் பிரிவு ஒன்றே காண்! உடல் நலனின் எழிலையெல்லாம் உறிஞ்சி உலரவைக்கும் மதுகை சான்றது பிரிவுத் துன்பம்.

> "நள்ளென் றன்றே யாமம்; சொல்லவிந்து
> இனிதடங் கினரே மாக்கள்; முனிவின்று
> நனந்தலை உலகமும் துஞ்சும்
> ஓர்யான் மன்ற துஞ்சா தேனே......" (குறுந்தொகை)

தன்னலமற்ற அன்புத் துறையில் திளைத்திருப்பார் தம் பிரிவுத் துன்பம் இத்தகைத்து! இப்பிரிவுத் துன்பத்திற்கு அடிகளாரும் ஆட்படாமல் இல்லை. செம்பொன்னின் வண்ணமேனி காட்டி, அவர்தம் சித்தத்தை யெல்லாம் ஈர்த்தவனுய்ச் சேய்மை வெளியில் ஒன்றிவிட்டான் அந்தச் சேயோன்! அப்பிரிவினைப் பொற மாட்டாமல் அலறி அலறி அழும் அடிகளின் ஓலக்குரல் கல்லை யுங் கரைக்கும்; வரையையுந் தகர்க்கும். பெரும்பான்மையான பாட்டுக்களில் அடிகளாரின் அரற்றொலியே படிந்திருக்கின்றது. "ஆண்டவன் காட்சியில் எழுந்த உவகையினும் அப்பெருமானது

பிரிவு நிலையிற் கலங்கிய கலக்கம் பெரிதாகலின்" நீர்வார் கண்ணராய் அடிகளார் அழுத அழுகையொலியே திருவாசக உலகெங்கும் கேட்கின்றது.

இனித் 'திருவண்டப் பகுதியிற் பெருகி வரூஉம் தலையாய உணர்ச்சி இன்பமே என்க. துன்ப உணர்ச்சியை ஒரு சில அடிகள் வெளிப்படுக்கின்றன வெனினும், அத்துன்பம் முழுத் துன்பம் அன்று.

"நீற்றேன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்" என்றும்,

"ஆற்று இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்று ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்" என்றும்

"உலையா அன்பென் புருக ஒலமிட்டு
அலைகடற் றிரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடுமாறு வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றுத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக......................"

என்றும் அடிகளார் வாயலர்த்திப் பாடும் போழ்து துன்ப உணர்ச்சி கிளர்கின்றது உண்மை. ஆயினும் நோக்குமின், இஃது இன்பம் விரவிய துன்பம் என்பதை! பேரின்பத்தோற்றத் தின் பிரிவை எண்ணி அப்பேரின்பப் பெருநிலையில் இருந்து கொண்டே அடிகளார் பாடுகின்றார் ஆகலின் துன்பம் துன்பமாக விளங்காமல் ஒருவகை இன்பமாகவே இலங்குகின்றது. புணர்ச்சி குறித்து நிகழும் குறிஞ்சித் திணையுட் பிரிவு பற்றி நிகழும் பாலையொழுக்கம் விரவி வருமாப்போல், இன்பங் குறித்தெழுந்த பாட்டில் துன்பமும் சிறிதளவு கலக்கின்றது. இன்ப நிலையில் அழுகைநிலை என்றே இதனைக் கோடல் வேண்டும்.

"ஆடுகின்றிலை; கூத்துடையான் கழற்கன்பிலை; என்புருகிப்
பாடுகின்றிலை; பதைப்பதுஞ் செய்கிலை; பணிகிலை; பாதமலர்
சூடுகின்றிலை; சூட்டுகின்றதுமிலை; துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை; தெருவுதோ றலறிலை; செய்வதொன்றறியேனே"

"என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றிநின் றெய்த் தலைந்தேன்
மின்னை யொப்பாய் விட்டிடுதி கண்டாய் உவமிக்கின் மெய்யே
உன்னை யொப்பாய் மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
அன்னை யொப்பாய் எனக்கத்தனொப்பாய் என்னரும் பொருளே"

எனவரும் பாடல்களைப் படித்துணரும் போழ்து, யாரும் உலவாத் தனிப் பெருவெளியிற் சென்று வானகம் எதிரொலிக்கக் கதறி அழ வேண்டும் போல் தோன்றுகின்றது. துன்பத்தின் ஆளுகைக்கு இங்கே முழுதுமாக நாம் ஆட்பட்டு விடுகின்றோம். இவை போன்ற பாடல்களிற் கிளர்ந்து வரும் துன்பந்தான் முழுத்துன்பம். இங்கே துன்பம் துன்பமாகவே பொலிகின்றது. ஆயினும் மேலெடுத்துக் காட்டப்பட்ட திருவண்டப்பகுதியின் அடிகள் இன்பம் விரவிய துன்பத்தையே புலப்படுத்துகின்றன. இப்பகுதியின் ஏனை வரிகளோ, இன்பப் பொருண்மை பற்றி நிகழும் கிளவிக்கொத்துக்கள்! இன்பத்தழுந்தித் தடுமாறும் அடிகளாரின் மெய்யின்ப நிலையையே அவை உணர்த்துகின்றன.

அடிகளாரின் நிலை

மணிமொழிப் பெருமானார் இப்பாட்டை எந்நிலையில் இருந்து கொண்டு பாடுகின்றார் என்பது, இன்னே ஆராயற்பாற்று. அடிகளாரின் உள்ளம், பெரிதும் இன்பவயப்பட்டிருக்கின்றது. இறைவன் எண்மையனாய்த் தமக்குத் திருப்பெருந்துறையில் குருவடிவிற் காட்சிதந்து அருளிய பான்மையும், அவன் ஏனை அடியார்களை உடனழைத்துக் கொண்டு மறைந்த நிகழ்ச்சியுமே இப்பொழுது அடிகளார் உள்ளத்தில் முனைந்து நிற்கின்றன. ஏனை அடியார்களும் தாமும் திருப்பெருந்துறையில் ஒருங்கிருந்த பொழுது உளமுருக்கும் ஞானாசிரியனாய் எழுந்தருளிப் போந்து எழிற் காட்சி தந்த இறைவன், உடனிருந்த அடியார்களைமட்டும் தன்னுள் ஒன்றுபடுத்திக் கொண்டு அடிகளை நோக்கிச் சின்னாள் இருக்கவெனக் கட்டளையிட்டு உருக்கரந்து ஒடுங்கினன். இறைவனின் காட்சி எத்தகைக் காட்சி.

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன்; மாலையன்; மலைந்த கண்ணியன்
மார்பின் அஃதே; மையில் நுண் ஞாண்;

நுதலது இமையா நாட்டம்; இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே; மூவாய்
வேலும் உண்டத் தோலா தோர்க்கே
ஊர்ந்த தேறே; சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்ன மேனி; அவ்வான்
இலங்கு பிறை அன்ன விலங்குவால் வையெயிற்று
எரியகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை;
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்........"

எனவரூஉம் அகநானூற்று வாழ்த்துப் பாவின் சொல்லோ வியத்தை எழிலோவியமாக நேரே காணும் பேறுபெற்றவர் காண், நம் அடிகளார்! "நீறுபட்டே யொளிகாட்டும் பொன் மேனி நெடுந்தகையின் தோற்றம்" அடிகளாரை உருக்கியது. அத்தோற்றக் காட்சியான் தாம் பெற்ற இன்பப் பெருக்கத்தை யும், அப்பெருக்கினுட் சிக்குண்டு தடுமாறிய தம் நிலையையும், மீள நினைந்தவாறே தில்லையம்பதியில் இருந்து கொண்டு இப் பாட்டினைப் பாடியருளுகின்றார் என்க. உலகியல் நிகழ்ச்சி ஒன்றனைக் காட்டி, அடிகளாரின் நிலையை மேலும் விளக்குவன்:

தலைமகனது பிரிவின்கண் அவனையே இடையறுது நினைந்து ஆற்றாளாகின்றாள் ஒரு தலைவி. உயிர்த்துணையாம் தோழி அவளை நெருங்கி 'நீ சிறிது மறந்து அமைதியுடன் இருத்தல் வேண்டும்" என ஆற்றுமாற்றான் ஆற்றுகின்றாள். அது கேட்டாள் தலைவி. தோழியை நோக்கிக் கூறுவாள்: "நீ, யான் அவரை மறந்து அவர் வருந்துணையும் ஆற்றியிருக்க வேண்டுகின்றாய். நின் மொழிப்படி யான் ஆற்றியிருக்கவே முயல்கிறேன். ஆயினும் என் செய்வல்? அவர் நாட்டு மணிநெடுங்குன்றம் வெண்ணிற உச்சியை யுடைய முகிலைச் சூடிக்கொண்டு என் புறத்தும் அகத்தும் தோன்றிக் கொண்டே இருக்கின்றதே....".

" அன்றாய் வாழிவேண் டன்னை நீமற்(று)
யான்அவர் மறத்தல் வேண்டுதி யாயின்

கொண்டல் அவரைப் பூவின் அன்ன
வெண்டலை மாமழை சூடித்
தோன்றல் ஆனாதவர் மணிநெடுங் குன்றே'' (ஐங்குறுநூறு 209)

"மணிநெடுங் குன்றம் தோன்றிக்கொண்டே இருப்பதனால், என்னால் அவரை மறந்திருக்க முடியவில்லை'' என்பது, தன்னை ஒருவனுக்குக் கொடுத்துவிட்ட தலைவியின் கூற்று. தான் தலைவனொடு தலைப்பட்ட நாள் தான் கண்ட மலைக்காட்சியை இன்னும் மறக்கவில்லை, தலைவி! அன்று தோன்றிய மலைக் காட்சியை அப்படியே தன்னுள்ளக் கிழியிற் பதித்துக் கொண்டிருக்கின்றாள். மணிநெடுங் குன்று தோன்றும்போ தெல்லாம் மாமழை சூடித் தோன்றுதல் போலத் தலைவியின் நெஞ்சத்தே தலைவன் தோன்றும் போதெல்லாம் தலைநாட்செய்த தண்ணளி ததும்பும் முகப்பொலிவோடு தோன்றுகின்றான் என்பது உள்ளுறை பொருள்.

"பொன்மலி புதுவீத் தாஅம் அவர்நாட்டு
மணிநிற மால்வரை மறைதோ(று)
அணிமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே.'' (ஐங்குறு. 208)

எனத் தலைவன் நாட்டு மாலை அந்திமாலைப் போழ்தில் மறையும் போதெல்லாம் தலைவி கண்கலங்கி அழுகின்றாள் எனச் செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள் ஒரு தோழி. ஒப்பற்றுத் திகழும் அன்பின் வயப்பட்டார் நிலை ஈதுகாண்!

இனி, மேற்காட்டிய பாட்டினையே வாயிலாகக் கொண்டு திருவண்டப்பகுதியுள் நுழைவோமாயின், அடிகளாரின் நிலை தெற்றென விளங்கும். மனையினுள் இருந்தவண்ணம் மலைக் காட்சியை நினைந்து புலம்பும் தலைவியின் நிலையில், அடிகளாரை வைத்துக் காண்க. அடிகளார் இப்பொழுது தில்லையில் உள்ளார். ஆயினும் திருப்பெருந்துறைக் காட்சி அவர் நெஞ்சினின்றும் நீங்கவில்லைகாண்! செல்லுமிடந்தோறும் அக்காட்சி அவர்தம் நெஞ்சினை நெகிழ்த்துக்கொண்டே இருக்கின்றது. தம்மைச் சுற்றிலும் உள்ளவையோ இயற்கையின் எழிற் கூறுகள் இயற்கையோ ஆண்டவன் உறையுள் காணுமிடமெல்லாம் தலைவனின் இருக்கை. கட்புலன் படியும் இடங்களனைத்தும் தலைவனின் நினைவையே எழுப்புகின்றன. மறத்தல் ஒல்லுமோ?

"ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணுய்நீ மாளாவாழ் கின்ருயே................"

என நெஞ்சினைக் கழறுகின்ருர் திருப்பெருந்துறையில்.

"நெடுந்தகை நீயென்னை ஆட்கொள்ளயான்ஐம் புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனைவிடுதி கண்டாய் விரவார் வெருவ
அடுந்தகை வேல்வல்ல உத்தரகோச மங்கைக் கரசே
கடுந்தகையேன் உண்ணுந் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே"

எனத் திருவுத்தரகோச மங்கையில், ஆண்டவன் அருட்டன்மையை நினைந்து பாடுகின்ருர்.

"தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்"

எனத் திருக்கழுக்குன்றத்தே இறைவனின் தலையளியை எண்ணிப் பாடுகின்ருர்.

"எமக்கெளிய,
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதை........."

எனப் பெருந்துறையில் தாம் ஆட்பட்டமையைத் திருவண்ணாமலையில் பாடுகின்ருர்.

"நானூர் என்உள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்.........."

என்று, இறைவனின் காட்சியாற் ரும்பெற்ற பயனைநினைந்து பாடுகின்ருர் தில்லைப் பெரும்பதியில். இங்ஙனம் இடந்தோறும் இறைவனின் தலையளி நினைந்து அவனை மறக்கவியலாமல் நெஞ்சங்கலங்கும் அடிகளார், தலைவனின் தண்ணளிச் செயலை நினைந்து புலம்பும் தலைவியேபோல் இறைவன் தம்மை ஆட்கொண்ட அருள் நிகழ்ச்சியையும் அவ்விறைக்காட்சியால் தாம் பெற்ற மெய்யின்ப வடிவத்தையும் கற்பார் நெஞ்சம் மேலெழும்பிப் பொங்கும் வண்ணம் திருவண்டப் பகுதியிற் பாடுகின்ருர் என்க. தாம் பெற்ற பேரின்பத்தை அடிகளார் ஏனைய பகுதிகளிலும் பாடினும் 'திருவண்டப்பகுதி' அவர்தம் இன்பவடிவத்தைப் புலப்படுத்தல் போல் ஏனைய பகுதிகள் மாட்டாவாம்.

(தொடரும்)

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 5–ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

58. நம்பனே யெங்கள் கோவே நாதனே யாதி மூர்த்தி
பங்கனே பரம யோகி யென்றென்றே பரவி நாளுஞ்
செம்பொனே பவளக் குன்றே திகழ்மலர்ப் பாதங் காண்பா
னன்பனே யலைந்து போனே னதிகை வீரட்டனுரே.

God is the great yogi, the wielder of mystic powers.

58. "O greatly loved, our King, our Lord, from all
eternity,
Our portion, our true mystic," thus from day
to day I sing.
O golden one, O hill of coral, I in love of Thee
Have wandered far and wide, Athihai Viratta
nam's king,
Have wandered far the shining blossom of Thy
foot to see.

(தொடரும்)

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — ஏழாம் கொத்து

இத்திருப்பாப் பத்தும் கரணம் பலவழிச் சென்றாலும், அருள்வழியாகச் செலுத்தும் சிவசத்தி யநுபூதி. இனி, தலைப் பட்ட அன்புக்கு மேம்பட்ட அன்பின் திறம் கூறிய திருவருள் விநியோகமாவன:-

தீர்ந்தவன் பான வன்பர்க் கவரினு மன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்மை யாட்கோண் டருளிய பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாத நாயேற் கருளிட வேண்டும் போற்றி.

(இ-ள்). பெரிய அன்புள்ள, குணவன்புடைய நாயன்மார்கட்கு அவரினும் எளிமை வலிமை காட்டி அருள்வோய் இரட்சிக்க. அடியேன் பசுபோதத்தைப் பதிபோதமாக்கிய பெருமையோய்! இரட்சிக்க! தேவதைகள் பிழைக்கும் வண்ணம் நஞ்சருந்தி அவர்கட்கு அமிர்தம் ஈந்த வள்ளலோய்! இரட்சிக்க! அபேத அத்துவிதத் திருவடி அடியேனுள்ளத்தில் இருப்பதாக நாயேற்கருளிய சுவாமி! இரட்சிக்க! — என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை-திருவான்மியூர். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது இதன் விலை ரூ. 13/- டி நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.

திருக்கண்ணார் கோயில்

தேவாரமணி, திரு. சட்டையப்பன் அவர்கள்.
திருப்பனந்தாள்.

காவிரியின் வட கரைத்தலங்கள் அறுபத்துமூன்றனுள், பதினேழாவது தலமாக விளங்கும் இத்தலம் வைத்தீசுவரன் கோயிலுக்கு அண்மையில் தென்கிழக்குத்திக்கிலே ஒன்றரைக் கல்லில் இருக்கிறது. குறுமாணக்குடி என்பது ஊரின் பெயர்; கண்ணார் கோயில் என்பது கோயிலின் பெயர். இறைவன் 'கண்ணாயிரநாதர்'; இறைவி 'முருகுவளர் கோதை'.

சீர்காழியிலிருந்து 'திங்கள் சடையண்ணலார் தம் திருப்பதி யாவையும் கும்பிட்டு எங்கும் தமிழ் மாலைபாடி ஏத்தி இங்கெய் துவன்' எனத் திருவாய்மலர்ந்தருளிய ஞானசம்பந்தப் பெருமான் தாதையோடு அடியார் புடை சூழக்கண்ணார்கோயிலை நண்ணிப் பாடுகின்றார்

"தண்ணார் திங்கள் பொங்கர வந்தாழ் புனல் சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார் கோயில் கைதொழு வோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகும்மே."

இது குறிஞ்சிப்பண்ணில் உள்ள முதல் பாட்டு. குளிர்ச்சி யான சந்திரனையும், பாம்பையும், கங்கையையும் தலையிலணிந்த பெருமானைப் பெண்ணுமாய் ஆணுமாய் மாதியலும் பாதியனாய்ப் பேரருளாளனாய் விளக்குகின்றார் ஆளுடைய பிள்ளை. அப்படி யுள்ள இறைவன் உறை கோயிலாம் கண்ணார் கோயிலைக் கைதொழச் சொல்லித் துன்பமும் அதற்குக் காரணமாகிய பாவங்களும் அணுகாது என்று வழி காட்டுகின்றார்.

அடுத்து ஐந்தாவது பாடலிலும், ஏழாவது பாடலிலும் இரண்டு வரலாற்று உண்மையை நமக்கு நினைவூட்டுகின்றார்.

விரோசனன் என்ற அசுரனுக்குப் பிறந்தவன் மாவலி; யாகங்கள் செய்து அதன் பயனால் பல சிறப்பான பொருள்களை அடைந்து சுவர்க்கலோக முதலியனவற்றை வென்று அரசாண்டவன் அவன்; தேவர்களுக்கு இன்னல் விளைவிக்கின்றான். ஆற்றாத அல்லலுக்குட்பட்ட தேவர்கள் பெருமானை வேண்டுகின்றனர்.

"நமது வரத்தினால் மூவுலக ஆட்சி புரியும் மாவலியைக் கொல்லாமல் தேவர்களின் துன்பத்தை நீக்கவேண்டும்" என்று திருமாலிடம் பெருமான் ஆணையிடுகின்றார்.

மறைக்காடுறையும் பெருமானிடம் மாவலியடைந்த நல் வரத்தை இங்கு நினைவு படுத்திக் கொள்வோம்.

திருமறைக்காடு என்று சொல்லப்படும் வேதாரணியத்துக் கோயிலிலே முன் ஒரு காலததில் அர்த்த யாம வழிபாட்டிற்குப் பின, இறைவன் திருமுன் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணையும் நிலையில் இருந்தது. அவ்விளக்கில் உள்ள நெய்யை அப்போது ஆங்கு வந்த எலி உண்ணும் பொருட்டுத்தன் மூக்கினால் திரியைத் தள்ளி விடுகின்றது. உடனே விளக்குச் சுடர் விட்டெரியத் துவங்கி விடுகின்றது - எலியின் மூக்கும் சுட்டு விடுகின்றது. அந்த நிலையில் சிவபெருமான் அந்த எலிக்கு வரமளிக்கிறார். இவ்வரலாற்றைக் குறுக்கை வீரட்டத் துப் பதிகத்தில் அப்பரடிகள் பின் வருமாறு பாடுகின்றார்:

"நிறைமறைக்காடு தன்னில் நீண்டெரி தீபந்தன்னைக்
கறை நிறத்தெலிதன் மூக்குச்சுட்டிடக் கனன்று தூண்ட
நிறை கடல் மண்ணும் விண்ணும் நீண்டவானுலக மெல்லாம்
குறை வறக்கொடுப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே."

மாவலியைக் கொல்லாமல், தேவர்களுக்கு ஏற்பட்டத் துன்பததைத்துடைக்கச் சிவபெருமானது அருளிப் பாட்டின் வண்ணம் திருமால் வாமனாவதாரம் தாங்குகின்றார்.

காசிபரிடத்து வாமனமுநிவராய் உதித்த திருமால் மாவலி அரசனிடம் மூன்றடி மண் யாசிக்கிறார். ஆனால் அதை விஷ்ணு வினுடைய தந்திரமென்று கூறித் தடுக்கின்றான் அசுர குருவாம் சுக்கிரன். ஆனால் மாவலி அதற்கு இணங்காமல் வாமனர் கேட்டபடி 'மூன்றடி மண் தந்தேன்' என்று கூறி விடுகின்றான். ஈரடியால் மூவுலகளந்த வாமனர் ஒரு அடிவைக்க இடமில்லாமல் இருக்கவே, மாவலி தன்னுடைய தலையைக் காட்டுகின்றான். மூன்றாவது அடியை அதன் மேல்வைத்து அழுத்துகின்றார் வாமனர். மாவலி சிறையிடப்படுகின்றான்.

இந்த வரலாற்றை நமக்கு நினைவுக்குக் கொண்டு வருகின்றது கீழே வருகின்றபாடல் :

“மறுமாணுருவாய் மற்றிணையின்றி வானோரைச்
செறுமாவலிபாற் சென்றுல கெல்லா மளவிட்ட
குறுமாணுருவன் தற்குறியாக் கொண்டாடும்
கறுமாகண்டன் மேயது கண்ணார் கோயிலே.”

'குறுமாண் உருவன்' என்பது குறுகிய பிரமசாரி வடிவந்தாங்கிய திருமாலைக்குறிப்பதாகும். தலத்துக்குக் 'குறு மாண்குடி' குறுமாணக்குடி என்பதாயிற்றோ?

'தண்ணார் திங்கள்' எனத்துவங்கும் சம்பந்தர் பதிகத்திலே ஐந்தாவது பாடலின் வரலாற்றைக்கண்டோம். இனி ஏழாவது பாடலின் வரலாற்றைக் காண்போம்.

“முன்னொரு காலத்திந்திரனுற்ற முனிசாபம்
பின்னொரு நாளவ்விண்ணவ ரேத்தப் பெயர்வெய்தித்
தன்னருளாற் கண்ணாயிர மீந்தோன்சார் பென்பர்
கன்னியர் நாளுந்துன்னமர் கண்ணார் கோயிலே.”

கௌதம முனிவருடைய மனைவி அகலிகை. அவளுடைய பேரழகில் மயங்கிய வானவனாய இந்திரன், கௌதமரில்லாத சமயம் அவருடைய இல்லத்தையடைகின்றான். கௌதமரைப் போலவே உருவம் தாங்கி வந்ததால் இந்திரனை இந்திரனாக எண்ண முடியாத அகலிகைக்கு ஓர் சோதனை! தவ வலிமை

யுடையோரான கௌதமர் இதை அறிகின்றார். வெளியில் சென்றிருந்த அவர் மீண்டு வந்த காலை 'அகலிகையையும், இந்திரனையும்' கண்டமாத்திரத்தில் அவருக்குக் கோபம் உண்டாகிறது. சாபம் இடுகின்றார். இந்திரனது உடம்பெல்லாம் ஆயிரம் பெண் குறி சேரவும், அகலிகை கல்லாகப் போகுமாறும் சபித்த கௌதமரை வேண்டிய அகலிகைக்கு விமோசனம் கிடைக்க வகைசெய்கின்றார் அக்கௌதமர்.

'ஸ்ரீராமபிரான் மிதிலைக்குச் செல்லுகின்றபோது அவருடைய பாதம் படக் கல்லாயிருந்த அகலிகை பெண்ணுருவம் அடைகின்றாள்.

"அஞ்சனவண் ணத்தான்தன் அடித்துகள் கதுவாமுன்னம்
வஞ்சிபோலிடையாள் முன்னை வண்ணத்தளாகி நின்றாள்."

என்று கம்பராமாயணம் அகலிகை சாப விமோசனத்தைக் கூறும்.

இந்திரனுக்கு உடம்பிலுள்ள குறிகள் அனைத்தையும் ஆயிரங் கண்களாக ஆக்கிக் கொடுக்கின்றார் இத்தலத்து இறைவன். பேரும் ஆயிரமுடைய பெருமான் 'கண்ணுயிரம் ஈந்த காரணத்'தால் கண்ணுயிர நாதர் ஆனார்.

கண்ணார் கோயிலைக் கைதொழுதால் துன்பமும் அதற்கு ஏதுவான பாவங்களும் அணுகாது, நல்வினையே நணுகும் என்று குறிஞ்சிப் பண்ணைத் துவங்கிய ஞான போனகர், பின் வருமாறு திருக்கடைக் காப்புச் சாத்தியருளுகின்றார் :

"காமருகண்ணார் கோயிலுளானைக் கடல்சூழ்ந்த
பூமரு சோலைப் பொன்னியன்மாடப்புகலிக்கோன்
நாமரு தொன்மைத் தன்மையுள் ஞானசம்பந்தன்
பாமரு பாடல்பத்தும் வல்லார்மேற் பழிபோமே."

பரந்துபட்டுச் செல்லுகின்றதான ஓசை மருவிய இப்பாடலைப்பாடி உய்வோமாக.

பழனி முருகன் பிள்ளைத் தமிழ்

பேராசிரியர்: திரு. E. S. வரதராஜய்யர், அவர்கள் B. A.
பூ ரு.

[மலர் 16. இதழ் 5-ன் தொடர்ச்சி]

சிறுதேர்ப் பருவம்

புல்லாதி யாப்புகரு மெல்லாம் பவங்கடொறும்
புகுந்து செயும் புண்ணியத்தால்
புனிதமார் நரவுருப் போதரப் பொய் விஷயப்
புணரியிற் புகுதராமல்
எல்லாரும் சரியை முதல் இனியவழி பலவாலும்
இறைவனருள் எய்த வெண்ணி
யிடைவிடா துள்ளமதை யொருவழிச் செய்துன்றன்
இணையடி யிறைஞ்சி யேத்தும்
நல்லார்கள் மனமரிய நடவு தேராக வவர்
நன்மை பெறு மான்மாவினை
நவிலரிய கருணை யொடு தூய்மை செய்துயர்நிலையை
நண்ணுமா பண்ணு மழகா
செல்லாருங் கயிலை மலைச் சிவபிரான் குருநாத
சிறுதே ருருட்டி யருளே
திருமால் மகிழ் மருக பழனி வளர் செய்யனே
சிறு தேருருட்டி யருளே. 10

நூற்பயன்

வண்பழனி வேலன் வளர்பிள்ளைப் பாவரைந்தான்
பண்பயிலும் நாவரதப் பாவலன் — எண்ணியதைக்
கற்பவரா யுள்நிலையம் கல்விமனை மாடுபுகழ்
நற்புதல்வர் பெற்றொளிர்வர் நன்று.

முற்றும்

மாரியல்லது காரியமில்லை

போன். குமார சுவாமி அடிகள்,
காஞ்சிபுரம்.

[மலர் 16. இதழ் 7-ன் தொடர்ச்சி]

வானம் பரவுதூஉம் வானம் பரவுதூஉம், ஞான முதல்வன் அருள்போல ஞாலக்குப்பானமுமாகி வளமும் பலவளித்துத்தானே துணையாதலான், எனவும், மாமழை போற்றுதூஉம் மாமழை போற்றுதூஉம்; நாமநீர் வேலியுலகிற் கவனளிபோல் மேனின்று தான் சுரத்தலால், எனவுங் கூறினர் இளங்கோவடிகள். கடவுளிடத்து அக்கினியிற் சூடுபோலப் பிரிப்பின்றி யிருக்கின்ற அருட்சத்தியின் ஆற்றல்தான் உலகில் உயிர்ப்பொருளையும் உயிரில் பொருளையும் இயக்கி ஆளவல்லது. அருட்சத்தி தொழிற்பட இல்லையானால் உலகமுந் தொழிற்படாது. அத்திருவருட் சத்தியே மழைவடிவாகத் தோன்றிப் பெரிதும் உயிர்களைக் காத்து வருதலாகும். மழை ஒருகாற் பெய்தலும் மற்றொருகாற் பெய்யாதிருத்தலும் எத்தகைய அறிவாற்றலுடைய மக்களின் சத்திக்கும் மேற்பட்ட ஒரு சத்தியின் தொழிற்பாடென்பதைக் கற்றாரும் கல்லாதாரும் அறிவுடையாரும் பேதையரும் கண்கூடாகக் காணக்கூடிய தொன்றாம். கைமாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லோ உலகு. மக்களது பதிலுதவியை விரும்பாது பெய்துவரும் திருவருளாகிய மழைக்கு என்ன உதவி செய்ய முடியும். இம்மழையானது பருவந் தவறாது பெய்து வருவதற்குச் சில காரணம் உண்டு. அதில் முதற் காரணம் அரசன் செங்கோலாகும். முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல். உறையென்பது மழைத்துளி. உறைகான் மாறிய ஓங்குயர் நனந்தலை, வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறி எனப்பெரும்பாணாற்றுப்படையினும் திருமுருகாற்றுப்படையினும் வருதல் காண்க. நீதி

தவறிய மன்னன் நாட்டில் பருவ மழை பெய்யாதென்பதாம் கொடுங்கோலாற் பெருங்கேடு விளையும்.

கோன்நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடில் மாரிவறங்கூரும்
மாரிவறங்கூரின் மன்னுயிரில்லை
மன்னுயிரெல்லாம் மண்ணுள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதி யின்ருகும்.

என்றனர் சீத்தலைச் சாத்தனுர்.

அரசன் முறைதவறி நடந்தால் மழை வளங்குன்றிப் பெருந்துயர் மிகும்.

வேந்தன் முறைதிறம்பின் வேதவிதி திறம்பும்
ஏந்திழையார் தங்கற்பும் இல்லறமு நில்லாவாம்
மாந்தர் பசியாலுணங்கி மழைவறந்து
பாந்தண் முடிகிடந்த பாரின் விளைவஃகுமால்.

என்பது பிரமோத்தரகாண்டம்.

கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கள் மிஞ்சி
நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியும் நீடி
பூண்முலை மகளிர் கற்பின் பொற்பழிந் தறங்கள் மாறி
ஆனஇவ் வுலகு கேடாம் அரசுகோல் கோடி னென்ருன்.

— *சீவகசிந்தாமணி.*

கொடுங்கோன் மன்னன் வாழும் நாட்டிற் கடும்புலி வாழுங் காடு நன்று. கடுஞ்சினங் கவைஇய காட்சிக் கொடுங்கோல்வேந்தன் காக்கும் நாடு பசிமிகும். மாரிநற்சூற் கொள்ளாது;கொண்மூ மழைகாலூன்ரு—வளவயல் விளையா; நாடோறும் நாடி முறை செய்யா மன்னவன் நாடோறும் நாடு கெடும். மன்னன் தன் ஞட்டில் நிகழுங் குற்றங்களை நாள்தோறும் நன்கு ஆராய்ந்து தக்கபடி முறைசெய்யாஞயின் நாடு சீர்கெடும். இதனை,

நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி யவனெறி நாடானேல்
நாடோறும் நாடுகேடு முடனண்ணுமால்
நாடோறும் செல்வம் நரபதி குன்றுமே. திருமூலர்,

கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு. நூல்வல்ல அமைச்சர் முதலாயினுரோடு ஆராயாது முறைதவறிச் செய்யும் அரசன் செல்வத்தையும், குடிகளையுஞ் சேர இழப்பான். வழக்கிழந்த மக்கள் மனமுற மறுகிநின்றழுத கண்ணீர் முறையுறத் தேவர் மூவர் காக்கினும் வழிவழியீர்வதோர் வாளாகும்மே.

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை.

அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

அரசனது கொடுங்கோன்மையால் வருத்தமுற்றுப் பொறுக்க மாட்டாமல் குடிகளழுத கண்ணீரே அவன் செல்வத்தை அடியோடடிழித்தற்குக் கருவியாமெனப் பெருமக்கள் பேசுவர். துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு. மழையில்லாமை இவ்வுலகத்திற் கெப்படித் துன்பம் பயக்குமோ—அப்படியே அரசன் அளியின்மை அவன் நாட்டில் வாழும் மக்களுக்குத் துன்பம் பயக்கு மென்பதாம்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர் காவலன் காவானெனின். மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனின் இன்ரும் (மணிமேகலை). அரசன் நெறியோடு நின்று உயிர்களைக் காவானுயின் பசுக்களும் பால் குன்றும். அறுதொழிலுடைய அந்தணரும் நூல் மறப்பர். பால் மிகுதலும் நூல் நிலவுதலும் அரசன் செங்கோலின் பயனேயாம். ஈதலேற்ற லென்ருறு புரிந்தொழுகும் அறம்புரி அந்தணர் என்று பாலைக் கௌதமரும், அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும் என்று தொல்காப்பியரும், இரு மூன்றெய்திய இயல்பினில் வழாது என்று நக்கீரரும்; ஒன்று புரிவோர் இரு பிறப்பாளர் மூத்தீச் செல்வர் நான்மறை பயில்வோர் ஐவகை வேள்வியர் எனப் பிறருங் கூறுவதைக் கவனிக்கவும்.

அறுதொழிலாளர் நூல்கள் அயர்ப்பர் ஆன்பயனின்றுகும்.
உறைபெய லொழியுங் கூழுங்குடிகளும் ஒருங்கு நீங்கும்
பெறுபயன் நாட்டிற் குன்றும் பிறங்கொளி நிலைபெறுது
கறையின்மேற் பொருள்கைக் கொண்டு காவலைவிடுப்பின் மைந்தா.
—விநாயகபுராணம்.

ஆவையும் பாரையும் மற்றறவோரையும்
தேவர்கள் போற்றுந் திருவேடத்தாரையுங்
காவலன் காப்பவன் காவாதொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளாநரகமே. —திருமந்திரம்.

அரசன் செங்கோற்காக மழையும் மாரியால் உலகியலும் நடைபெற வேண்டியதால் மாரியல்லது காரியமில்லையென்றுர். மக்கள், வேந்தன் சீறின் ஆந்துணையில்லை யென்று சக்கர நெறி நின்று வாழ்பவர்கள். தானுேக்கா தெத்துயரஞ் செய்திடினுந் தார்வேந்தன் கோனேக்கி வாழுங் குடிபோன்றிருந்தேனே என்ருர் குலசேகராழ்வார். வானுேக்கி வாழும் உலகெல்லா மன்ன வன் கோனுேக்கி வாழுங்குடி.

கோனுேக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலைப்
பானுேக்கி வாழுங் குழவிகள் வானத்
துளிநேக்கி வாழும் உலகம் உலகின்
விளிநேக்கி யின்புறுங் கூற்று. —நான்மணிக்கடிகை.

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

தான் முறை செய்து பிறர் நலியாமற் காக்கப்படும் அரசன் பிறப்பால் மகனே ஆயினும் செயலாற் கடவுளென் றெண்ணப் படும்

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குந் தந்தையும் தாயும் அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை. – நீதிநெறி விளக்கம்.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் – புறநானூறு.

ஓர்ந்து கண்ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்து செய்வதே முறை.

அரசன் தன் மக்கள் ஒக்கல் யார்மாட்டும் நடுவு நிலையில் நின்று குற்றஞ் செய்தவரை நூல் வல்லாரோ டாராய்ந்து தக்க படி தண்டிக்க வேண்டும். மனுவேந்தன் தன்மகன் அபுத்தி பூர்வமாகச் செய்த பசுக் கொலைக் குற்றத்திற்கும் மகனைத் தேர்ச் சக்கரத்தி லூர்ந்ததனை,

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின்கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்"

— சிலப்பதிகாரம்.

சிந்தனை ஆவிற்கு முற்றத் திருத்தேரில்
மைந்தனை யூர்ந்த மறவோனும் — விக்கிரமச்சோழனுலா.

மருளும் பசுவொன்றின் மம்மர் நோய்தீர
உருளுந் திருத்தே ருரவோன். — குலோத்துங்கச்சோழன் உலா.

அவ்வருக்கன் மகனுகிமனு மேதினி புரந்தரிய
காதலனை ஆவினது கன்று நிகரென் றெவ்வருக்கமும்
வியப்ப முறைசெய்த கதையும். — கலிங்கத்துப்பரணி.

பெரு மக்கள் இளங்கோவடிகளும், ஒட்டக்கூத்தரும், செயங்கொண்டாரும் கூறியதைக் கவனிக்கவும். தெய்வச் சேக்கிழாரும்,

ஒரு மைந்தன் தன்குலத்திற் குள்ளா னென்பதும் உணரான்
தருமந் தன்வழிச் செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்.

என்றனர்.

இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

உலகத்தை அரசன் காப்பான்; அவனது செங்கோல் மனு வேந்தனையும் பொற்கைப் பாண்டியனையும் காத்ததுபோற் காக்கு மென்பதாம்.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

அரசனது செங்கோலே வேதத்திற்கும் அதிற் சொல்லப் பட்ட அறத்திற்குந் துணை யென்றனர். அரசன் நெறியோடு நின்று முறை செய்துவரின் அந்தணர் நிறையோடு நின்று மறையோதி வருவர். பிறரும் நிலை தவறுமலிருந்து தத்தமக் குரிய அறங்களைச் செய்து வருவர்.

கோதிலாத செஞ்சூட்டுடை வாரணங்கூவ
ஓதஞாலத்து மற்றைய தலத்துளார் விழிப்பார்
ஈதலேற்றலோ டறுதொழி லிருபிறப்பாளர்
வேத நாதத்தின் விழிப்பதவ் வியநகர் மாக்கள்.

தத்தஞ் சமயத்தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்டமுஞ் செயும் அம்மையி லிம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. திருமூலர்.

இயல்புளிக்கோலோச்ச மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. — திருக்குறள்.

நமரெனக் கோல்கோடாது பிறரெனக் குணங்கொல்லாது முறை தவரு மன்னன் நாட்டில் தகுதியான மழையும் மிகுதி யான விளைவும், தொகுதியாக உளவாகு மென்றனர். கொலை யிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களை கட்டத னேடு நேர். உழவன் களையைக் கடிந்து பயிரை ஓம்பல்போல், அரசனுந், தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்லு வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொள்வார், கற்பழிப்பார் முதலியோரைக் கொன்று குடிகளை ஓம்பவேண்டும். மன்னன் நீதியில் நின்றிலனேல் மழை பெய்யாது, உலகியல் நடைபெருது. ஆதலால் மாரியல்லது காரியமில்லை யென்றனர் ஔவையெம் அன்னையார். குற்றங் களைந்து குடிகளைக் காக்கும் மன்னவன் நீடு வாழ்க.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்

அற்புதத் திருப்பதிகங்கள்

Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

The passers-by helped and directed St. Sundarar. At Tiruvenbakkam he appealed to God enshrined there and questioned whether he was there. Pat came the reply. "We are here; you may go". Then Lord Siva gave the saint a walking stick. St Sundarar was much wounded at this and there burst forth a decad of poems.

திருவெண்பாக்கம்: பண்: சீகாமரம்

"பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயில்உளா யோஎன்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம்போகீர் என்றானே."

"I believed that if I blundered, my Lord would forgive me. Acting on this belief I committed a blunder and He blinded my eyes. I enquired, "Are you in the temple, my Lord, with beringed ears'. He replied from inside, "We are here and you may go".

(To be continued)

இரும்பாழி

வித்துவான். திரு. சி. கோவிந்தராசனுர் அவர்கள்

தமிழக வரலாற்றில் இடம்பெறும் பள்ளியும் பாழியும் சமணப் பெருமக்கள் கலை வளர்த்த பேரிடங்களாகும். பள்ளியில் எண்ணும் எழுத்தும் மாணவர் பயில, முதுபெரும் சித்தராம் சமண முனிவர் வாழ் பாழியில் மருத்துவம், சிற்பம், ஓவியம் போன்ற அருங்கலைகள் ஆய்வுடன் வளர்க்கப் பெற்றதுடன், பாலி மொழியிலும் வட மொழியிலும் இருந்த சிறந்த நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றும், சமணத்தின் கோட்பாடு கள் கதைப் போக்கில் இலக்கிய வடிவில் யாக்கப்பெற்றும், நாட்டில் மக்களிடையே பழக விடுதற்குரிய கருவூலமாகவும் பாழிகள் இடம் பெற்றன. இத்தகைய பள்ளிகளும் பாழிகளும் செயற்கையில் எழுந்த கட்டிடங்களாகவும் இயற்கையில் அமைந்த மலைக் குகைகளாகவும் இருந்தனவாயினும், இன்று அவை உரிய வடிவிற் கண்டறிதற்கியலாத வகையில் சிதைந் தும் புதைந்தும் நிலைமாறியும் பெயர்மாறியும் தமிழகத்தில் ஆங் காங்குக் கிடக்கின்றன.

பள்ளிகளும் பாழிகளும் நிலைத்திருந்த ஊர்கள், அவ்வவற் றின் பெயர்களைக் கொண்டே பெயர் பெற்றருந்தன வென்பதை சிராப்பள்ளி, பெரும்பள்ளி, பாழி, பெரும்பாழி, இரும்பாழி என் னும் ஊர்ப் பெயர்களால் நன்கறியலாகும். இவற்றுள், இறை யனுர் களவியலுரை மேற்கோள் பாடலாக வந்துள்ளதும் 'பாண் டிக் கோவை' என்று சுட்டப் பெறுவதுமாகிய செய்யுட்களில் பாட்டுடைத் தலைவனுகக் கொண்ட, 'பன்னிய தீந்தமிழ் வேந் தன் பராங்குசன்,' 'ஆடல் நெடுங்கொடித்தேர் அரிகேசரி' என்

இக்கட்டுரை கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் பொழில் என்னும் இதழிலிருந்து ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

றெலாம் சிறப்பிக்கப்படும் பாண்டியன், 'பாயப் புரவி கடாய் வந்து பகை மலைந்தாரை' பாழி யென்னுமிடத்தில் புறங்கண்ட தாகக் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய பாழிகளுள் ஒன்றினைக் கண்டு ஆராய்ச்சி செய்யும் அவாமிகுந்திருந்த வெமக்கு வடகோனாட்டின் ஒரு பகுதியான புதுக்கோட்டைக்கு மேற்கே பத்துக்கல் அளவில் அண்ணல் வாயில் கூற்றத்துள் அடங்கிய இரும்பாழி என்னும் ஊர் இலக்காகியது. சென்ற 22-10-62ல் யான் இரும்பாழியினைக் கண்டு ஆராய்ச்சி செய்யச் சென்றபோது, கல்வெட்டுக்களைப் படித்தறியும் அவாவுடன் என்பாற் பயிற்சி பெறும் இராசை. மு. கந்தசாமி, பொ. பழநியப்பன், அண்ணல் வாயில் அரங்க சாமி ஆகிய தமிழ் மாணவர்கள் உடன் வந்தார்கள். புதுக் கோட்டையிலிருந்து அண்ணல் வாயிலுக்குச் செல்லும் பேருந்து வண்டியில் இடம் பெற்ற யாங்கள் இரும்பாழிக்குச் செல்லும் குறுக்கு வழியாக அமைந்த மதிய நல்லூரில் இறங்கி வழிக் கொண்டோம்.

முத்தரையர் காலத்தில் கோனாட்டில் விளங்கிய பெரு நகரங்கள் ஏழனுள் ஒன்றாக விளங்கிய இரும்பாழி, இன்று குறுகி, காடு மேடாக வரிசிலற்றுக் கிடக்கும் இடிபாடுகளும் தரிசுகளும் நிறைந்த சிற்றூராக இருப்பினும் பழம் பொருளா ராய்ச்சிக்கோர் நிலைக்களனாகும்.

ஊரின் வடபுறத்தில் காடடர்ந்த பகுதியில் இடிந்து தரை மட்டமாகிக் கிடக்கும் பெரியதொரு கற்றளி ஆராய்ச்சியாளர்க் கோர் இலக்காகும். கள்ளியும் முள்ளியும் மரங்களும் நிறைந்து எழுந்து அடர்ந்து வழியின்றியிருப்பினும், மிக முயன்று இடி பாடுகளின்மேல் ஏறியும் மரங்களைத் தழுவியும் உள்ளே சென் றோம். புதர்களினிடையே ஆங்காங்கு தலை நீட்டும் அடிப்படை வரிசையினைக் கொண்டு, அக்கற்கோயில் கீழ் மேல் இருநூறடி நீளமும், தென்வடல் நூற்று இருபதடி அகலமும் கொண்டுள் ளதைத் திட்டமாக அளந்தறியலானேன். கோயில் கிழக்கு நோக்கியுள்ள தென்பதற்குரிய அறிகுறியைப், புதரினுள்ளி ருந்து ஒன்பதடி இடைவெளியளவில் இணைந்த பாங்கில் எழுந்து

நிற்கும் இரண்டு நிலைச்சட்டக் கற்கள் உணர்த்துகின்றன. எனவே, அது முதல் கோயிலின் உட்பகுதிகளை முறையே, தலை வாயிலாகிய தோரண வாயில், திருமுற்றம், தோற்ற மண்டபம், பெருமண்டபம், வாரமண்டபம் கருவறை ஆகிய பகுதிகளுடன் ஒப்பனை மண்டபமும் கொண்ட கோயிலென்பதை முயன்று அறியலானேன். கருவறைப் பகுதியிலோ மற்றைய விடத்திலோ எத்தகைய திருவுருவங்களும் கிடைத்தில. கருவறையமைந்த இடமாகும் கற்குவியலிடையே சிக்கி நின்ற நாற்புற மனைக் கல்லின் அமைப்பினைக் கொண்டு, அஃது அக்கோயிலில் எழுந்தருளப் பெற்ற திருமேனியை அமைத்த இருக்கையணைக் கல்லென்பது புலனாயிற்று. அக்கல்லின் நடுவே குடையப்பட்டிருந்த குழிவு, உள்ளே ஓடியவளவில் குறுகும் கூம்புக் குழிவாக இருந்தது. சிலைகளை நிறுத்தும் இருக்கைமனைச் கற்களின் சிற்ப இலக்கண முறையைக் கொண்டு ஆராயின், இதன்மேல் இரண்டு முழவளவில் உயர்ந்து நின்ற திருமேனி அமைக்கப் பட்டிருந்த தென்பது புலனாகும். கருவறைப் பகுதிக்கு வடபால் கள்ளிப் புதர்கட்கிடையே தலை தூக்கி நிற்கும் கற்சுவரில் கல்வெட்டுப் பகுதிகள் இருக்கின்றன. நெருங்கிச் செல்ல வழியின்மையின் கல்வெட்டுச் செய்தியினைப் படித்தறிய வியலவில்லையாயினும், எழுத்துக்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழெழுத்துக்களாகும். எனவே, இக்கோயில் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் சில நூற்றாண்டளவிலும் நன்னிலையிலிருந்து அழிந்திருக்க வேண்டுமென்பது தெள்ளிதின் விளங்குகின்றது. இப்பகுதியினைக் காராள மன்னர் ஆண்டதாக ஊரவர் தெரிவிக்கின்றனர். வரலாற்றில் காராளரைப் பற்றிய ஆய்வுக்குரிய சான்றுகள் இன்னும் கிடைத்திலதாதலின் விடுத்து மேற்செல்வோம்.

பின்னர், இரும்பாழியின் தென்புறப் பகுதியாகும் கள்ளன் பட்டி என்னும் பகுதியினைக் காணலுற்றேன். பாறை நிலப் பகுதி மிகுந்த இங்கு, யானைகளைப் போன்றும், குடிசைகளைப் போன்றும், வைக்கோற் போரினைப் போன்றும், பனையளவுயர்ந்த கோபுரத்தினைப் போன்றும் பாறைகள் நிலமகளின் எழிலை எடுத்துக் காட்டுவன போன்று எழுந்து கலந்து நிற்

கின்றன. மாமல்லபுரத்தில் கற்கோயில்களைக் கண்ட மன்னவர், இப்பகுதியினைக் கண்டிருப்பின் இங்குள்ள பாறைகள் சிற்பச் சுவட்டால் சித்திரிக்கப்பட்டிருக்குமென்பதற் கோரையமில்லை.

இப்பகுதியில், ஆங்காங்குச் சுனைகள் மிகுதியாக இருப்பதால் தரை நீர்க்கசிவு பெற்றிருப்பதுடன், சிற்சில பகுதிகளில் ஊற்றெடுத்தும் ஓடுகின்றன. ஊற்றோட்டப் பகுதிகளினால், நிலத்தில் அரிப்பு ஏற்பட்ட சுவடுகள் நிறைந்திருக்கின்றன. ஒரு பகுதியில் அமைந்த குழியில் பல தாழிகளின் சிதைவுகள் காணப்பட்டன. ஒரு தாழியினுள் சிதைந்த எலும்புகளுடன் மண்ணோடு மடிந்த இரும்புக் கத்தியின் துண்டுகளும், சிகிமுகிக் கற்களும் இருந்தன. தாழிகள் மிகப் பழைய காலத்தைச் சார்ந்தவைகளாகும்.

இவ்வாறான பழமைகளோடு விளங்கும் இப்பாழியினைச் சார்ந்தே, முத்தரைய மன்னர் நிகழ்த்திய அண்ணல் வாயில் போர்க்களப் பகுதி தரிசாக இன்றுமுளது. பாண்டிக்கோவையுள் கூறப்பெறும் தென்பாழிப் போர் நிகழ்ந்த பாழி இவ்விரும்பாழியாகவே இருக்க வேண்டுமென்பதையும், இங்கு சமணரின் வாழ்வு நிறைந்திருந்த தென்பதையும் வரையறை செய்ய எஞ்சியதாகவுள்ள சான்றுகள் விளக்க முறுமளவிலும் இரும்பாழியின் வரலாறு எஞ்சியதாகும்.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்.
கோயமுத்தூர்.

[மலர் 16, இதழ் 6-ன் தொடர்ச்சி]

பாசமார்க்க நீக்கிப் — பரமகுரு நின்பதத்தின்
தாசமார்க்க மொன்றேனுந் — தந்தருள்வாய் சற்குருவே. 241

இதுதருணத் தாயினுமிவ் — வேழைமுனந் தோன்றி
பொதுவி லுபதேசம் — புரிந்தருள்வாய் சற்குருவே. 242

பொய்வாயுந் தீச்செயலும் — புன்னெஞ்சுங் கொண்டவெனை
யுய்வாயென் றென்பால் — உரைப்பவரார் சற்குருவே 243

விதிசெய்கை மெய்வாய் — விடயமுரு நெஞ்சம்
வதியவெனக் கித்தருணம் — வந்தருள்வாய் சற்குருவே. 244

பெருங்கருணை யாளனெனும் — பெம்மானே யென்பால்
வருங்கருணை யின்றேனின் — வண்மையென்னே சற்குருவே. 2↑5

எனையறியாநல் குரவை — யின்றுதொலைத் தென்னுள்
உனையறிந்தே யின்பமுற — வுனனியருள் சற்குருவே. 246

பாவியெனை வாட்டும் -- பவநோயற வொழித்துக்
கூவியெனை யாளுங் — குறிப்பிலையோ சற்குருவே. 247

பகைசேரா வுள்வாயின் — பாங்கோர் தீபத்தின்
தகைசேர வுன்னருளைத் — தந்தருள்வாய் சற்குருவே. 248

கண்ணுர நின்றனையே — கண்டாற் கவலையெலாம்
விண்ணுரச் சென்றிடுமே — மேதகவென் சற்குருவே. 249

எனையாண்டு கொண்டதுண்மை — யென்னி லென்னெஞ்சந்
தனையாளாநின் கருணைத் — தன்மைநன்றே சற்குருவே. 250

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

திருச்சாய்க்காடு

வித்துவான், சைவமணி.
திரு. பொன். முருகையன் அவர்கள்
திருப்பனந்தாள்.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

— திருஞானசம்பந்தர்

ஆதியந்தங்கடந்த பரம் பொருளாகிய இறைவன் கோயில் கொண்டு விளங்கும் தலங்கள் பல. அவற்றுள் சோழ நாட்டில் உள்ளதும், காவிரி நதி கடல்புகும் இடத்து உள்ளதும், தீர்த்தப் பெருமையுடையது மாகத் திகழ்வது திருச்சாய்க்காடு என்ற தலமாகும். "பொன்னி சாகரம் மேவு சாய்க்காடே" எனச் சமய முதுகுரவரால் பாடப் பெற்றதும் இத்தலமேயாகும்.

இருப்பிடம்: சோணாட்டின் வளம் பெருக்கும் பொன்னி நதி கடல் புகும் காவிரிப் பூம்பட்டினத்திற்கு மேற்கே இரண்டு கல்தொலைவில் உள்ளது. மாயூரத்திலிருந்தும் சீர்காழியிலிருந் தும் இத்தலத்திற்குச் செல்லவழிகள் உண்டு.

தலப்பெருமை: இந்திரனுடைய வெள்ளை யானை தன் கொம்புகளால் கோயில் விமானத்தைத் தோண்ட முயன்றபோது இறைவனருளால் ஆதிசேடனது முடியிரத்தினங்களின் சாயை வந்து முழுதும் நிறைந்தமையால் இத்தலத்திற்குச் சாயாவனம் என்ற பெயர் உண்டாயிற்று. பைஞ்சாய் என்னும் கோரை நிறைந்த காடாக (வனம்) இருந்ததால் சாயாவனம் என்ற பெயரும் ஏற்பட்டது. இவையேயன்றி இந்திரன் வழிபட்டமை

யால் இந்திரபுரி என்றும், ஐராவதபுரி, தெய்வநாயகபுரம் பூம்புகார், நகரச்சாயை என்றும் பல பெயர்கள் இவ்வூருக்கு உண்டு.

மூர்த்தி விசேடம்: இறைவன்–சாயாவனேசுரர், இரத்தின சாயாவனேசுவரர், சாயாவன நாதர் என்றும் பெயர்கள் வழங்கு கின்றன. கல்வெட்டுக்களில் திருச்சாய்க்காட்டுடையார், சாயை நாயகர் என்ற பெயர்கள் காணப்படுகின்றன.

இறைவி திருநாமங்கள் – கூவென்ற கோதையார், குயிலி னும் இன்மொழியாள், கோஷாம்பாள் என்பன. விநாயகர் சாயா வனப் பிள்ளையார் என வழங்கப் பெறுகின்ருர். சூரசங்கார மூர்த்தியான பால சுப்பிரமணியர் வில், மயில், வேல், சேவல் கொடிகளுடன் காட்சிதரும் சிறப்பு இத்தலத்தின் பெருமைக்குச் சான்ருகும்.

தலப் பெருமைகள்: காசிக்குச் சமானமான ஆறு தலங் களுள் சாயாவனமும் ஒன்று. "பூத்த வாவிகள் சூழ்ந்து பொலிந்த சாய்க்காடு" என ஞானசம்பந்தப் பெருமான் கூறுகிருர். இந் திரன் தன்னுடைய தாயின் விருப்பப்படி இத்தலத்திலுள்ள மூலப் பெருமானே எடுக்க முயன்றபோது, இறைவன் அருளால் ஆதி சேடனின் பணமணிகளின் ஒளிபட்டு, இந்திரனுடைய கண்கள் ஒளிமழுங்கின. உபமன்யு முனிவர், இயற்பகை நாயனுர், ஐயடிகள், காடவர் கோன் முதலியோர் வழிபட்டுப்பேறு பெற்ற தலம்.

தீர்த்தப்பெருமைகள்: ஐராவத தீர்த்தம், சங்கமுக தீர்த் தம் என்பன சிறந்த தீர்த்தங்கள். ஐராவத தீர்த்தத்தில் நீராடிச் சாயாவனேசுவரைத் தரிசித்துத் திருவெண்காட்டு முக்குள நீரில் படிந்து மீண்டும் ஐராவத தீர்த்தத்தில் நீராடிச் சாயாவனேசுவர ரைத் தொழுபவர் முத்தியடைவர் என்பது தலபுராணத்தால் அறியப் படுகிறது. அப்பாடல் வருமாறு

"நிலைமை பெறுஞ் சீரயிராவத தீர்த்தம்
நீராடி நீங்கிப் பொன்னி
அலைபுரளும் புனற் படிந்து சாயாவனேசர்
பதம் அன்பால் போற்றித்

தலைமைபெறு சங்கம தீர்த்தம் தோய்ந்து
சிதவன முக்குளத்தில் முழ்கி
இலகி பத்தின் தடம்படிந் திந்திரலிறு
கங்காண முத்தியீவோங் கண்டாய்''
— சாயாவனத்தலபுராணம்.

ஐராவத தீர்த்தம்: கோயிலுக்கு முன்னே உள்ளது. இந்திரனது வெள்ளையானை நீராடி வழிபட்ட பெருமையுடையது. இத்தீர்த்தத்தில் அமாவாசை, பௌர்ணமி, மாசிமகம், சிவராத்திரி, தைமாதப் பிறப்பு, கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, மார்கழித் திருவாதிரை நாள் முதலிய விசேட நாட்களில் நீராடிப் பெருமானை வழிபட்டால் அசுவ மேதயாகம் செய்த பலனைப் பெறுவர். இச்செய்தி யமைந்த பாடல்

"இரவிமதி கலந்திடுநாள் பூரணைஆடிப்பிறப்
போடிலங்கு மாசி
விரவுமகம் சிவநிசிதை மாதத்தின்
பிறப்புடனே விருச்சிகத்தில்
பரிதிதினம் இந்துதினம் மார்கழியில்
ஆதிரைநாட் பரிந்துமுழ்கிப்
பரவி நியமம் புரியின் அயுதமேதபலன்
பலிக்குந் தானே — தலபுராணம்,

சங்கமுகதீர்த்தம்: காவிரி நதி கடலுடன் கலக்கும் இடம். ஆடி - தை அமாவாசை நாட்களில் மக்கள் நீராடுவர். திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பட்ட அறக்கட்டளைப்படி மேற்படி நாட்களில் அன்னம் பாலிப்பு நடைபெற்று வருகிறது.

கல்வெட்டுக்கள்: இக்கோயில் சுவர்களில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இராசராச சோழன் தன்னுடைய எட்டாம் ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு ஒரு நந்தவனம் அமைக்க நிலம் அளித்த செய்தி ஒரு கல்வெட்டிலிருந்து விளங்குகிறது. "இராசராசன் திருநந்தவனம்" என்று அழைக்கப்படுகிறது. சோழன் திரிபுவன வீரதேவன் காலத்தில் கோயில் பூசைக்கும் பழுது பார்ப்பதற்கும் நெல் வழங்கப் பட்டிருக்கிறது. இன்னும் திருபுவனச்சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டான்,

வீரராசேந்திர சோழன் முதலிய அரசர்களால் செய்யப்பட்ட பல தருமங்களும் கல்வெட்டுக்களால் புலனுகின்றது. கோயிலுக்குத் தினந்தோறும் எட்டு சாயாவன நாழி மிளகு கொடுப்பதற்காக வல்லம் என்ற ஊரின் தலைவன் உத்ரபாதி நாயக்கன் திருச்சாய்க்காடு வேளானிடம் வீடும் நிலமும் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டன. சாயாவன நாழி என்ற ஒரு அளவு அக்காலத்தில் வழங்கி வந்தமை அறியக்கிடக்கிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருஞ் சிறப்புக்களையுடைய இத்தலத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் நிரந்தர நிதி ஏற்படுத்தப்பட்டு ஆடி, தை மாதங்களில் அன்னம் பாலிப்பும், தண்ணீர்ப் பந்தல் தருமமும், மாசி மாதத்தில் சிவராத்திரி வழி பாட்டுச் சிறப்பும், மற்றும் வேண்டுங் காலத்து வேண்டிய பொருள்களும் நடத்தப் பெற்று வருகின்றன.

இத்தலத்தைச் சைவ சமய அன்பர்கள் ஒரு முறையேனும் சென்று கண்டு தொழுதல் பிறவிப்பயனுகும்.

ராகம் : எதுகுல காம்போதி தாளம் : ஆதி

பல்லவி

இதயமலரை உன் இணையடி தன்னில் வைத்தேன்
கவலைதீரவே கடைக்கண் பாரய்யா கைலாசநாதா

அநுபல்லவி

ஆதாரம் ஒன்றே அவனிதனில் என்று
பரமன் திருவடியை பக்தியுடன் தினமும் (இதய)

சரணம்

அறிந்தநாள் முதலாய் அன்னையின் அணைப்பறியேன்
அன்பெனும் ஊற்றை நாடி அலைந்து
மிகவும் நொந்தேன் தஞ்சம்நீயே யன்றி
தரணியில் ஏனெனக்கு தயாபரனே தாமதம்ஏனே இன்னும்
(இதய)

திருமதி சு. விசயாம்பிகை,
ஸ்ரீவைகுண்டம்,

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

22

The Supreme God-head is the father and mother of all beings in the Universe. He feeds and takes care of each and every one of them. Even the tiny being such as the ant, creeping in the remotest corners of the undiscovered part of the world and the embryo growing in the mother's womb are all well fed with food and drink without fail. This motherly and graceful attribute of God is remembered and extolled in this song by the poet-saint.

தாயர்கர்ப்பத் தூடனமும் தண்ணீரும் தந்தருளும்
நேயஉனை யாரே நினையார் பராபரமே!

(பொ–உரை) தாயின் வயிற்றுள் வாழுகிற காலத்தும் உணவினையும் தண்ணீரையும் தந்தருளும் நேயரே, தேவரீரை நினையாதவர் யார்?

Oh! God Supreme! Will any one fail to remember You, My Lord! Whose benignant grace protects even the tiny embryo in the mother's womb with food and drink?

———

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

தமிழ்க்கனவு

திரு. இர. குழந்தைவேல், அவர்கள் எம். ஏ.
பூ. சா. கோ. கலைக்கல்லூரி. கோவை-1.

மனிதனுக்குப் பெருமை சேர்ப்பது பகுத்தறிவு. அவனுக்கு வாய்த்துள்ள இப்பகுத்தறிவு, அவன் வாழ்வைச் செம்மை செய்யும் சீர்மையுடையது. அறிவுச் சிறப்பு, பகுத்தறிவிற்கு உயர்வைப் பெருக்குவது. மனத்தின் கண்ணைத் திறந்த அறிவுத்திறம் ஏனைய உயிரினங்களிலிருந்து அவனை வேறு படுத்தியது, அவனுக்கு ஏற்றம் தந்து நின்றது; உயரிய உயர்திணையின்பாற் படுத்தியது.

அம்மனிதன் உயர்திணையாய் வாழும்போது பண்பாடு நிலவுதலியல்பு, மாசில்லாத அம் மரபினரிடத்துத் தூய புலமை பண்பட்டு அரும்பும். அவர்தம் நெஞ்சவோட்டத்தின் வெளியீட்டால் இலக்கியக்கலை கிடைக்கும். இத்தாய்மைக் கலை தமிழுக்குப் புதியதன்று.

பாட்டுக்கலை ஈன்று புறந்தந்த புலமைப் பெருமாட்டியருள் ஆண்டாள் ஒருவர். அப்பாட்டுலகத் தமிழ்சாறு ஆண்டாள் நெஞ்சிற்கு உரம் ஏற்றியது. அச்சிறப்பு,

.... "பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்".

(திருப்பாவை. 27)

என்னும் செவிநுகர்கனியாய்ப் பழுத்தது. உணர்ச்சிக்கு உயர்ந்த விருந்தை இத் தமிழ்ப்பாட்டில் நுகரலாம். மேலே கண்டது, எதிர்கால மக்கள் நல்வாழ்வு இங்ஙனம் கவலை நீங்கிச் சிறந்து பொலிய வேண்டும் என ஆண்டாள் எண்ணி ஏங்கிக் கண்ட கனவு.

'பாலொடு கலந்த சோறு. அந் நலச்சோற்றில் சேர்த்த நெய் ஊறித் தேங்கலாயிற்று. நெய்துள்ளிய அப்பாற்சோறு, உயிரெல்லாம் துளிர்த்துக் குளிர்ப்பத் தம் ஐயனுடன் உண்ணுங்கால் முழங்கை நனைந்து விளங்கல் வேண்டும்' என்று ஆண்

டாள் எல்லையில்லாத மகிழ்ச்சியிற்றிளைக்க நனவுநாளை உறுதி யாகக் காணும் விழைவுப் பெருக்கத்திற்குக் குறிப்புக் காட்டி யிருத்தல் ஈண்டு உன்னற்பாலது.

உயர்திணை மக்களாக வாழும் பேற்றுக்கு அறிகுறி, அழிவிலாத முயற்சியினை மேற்கொண்டு எதனையும் பெறலாம் என்று எண்ணி உழைக்கும் ஊக்கமுடைமையாகும். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? முயற்சியும் எண்ணமும் ஒன்று பட்டால் செயல் கனியும்; வீறுபெறும். இங்கு வேண்டுவது குறை யாத நம்பிக்கையே. பல துறைகளிலும் சிறப்பதற்கு உரனைத் தருவது நம்பிக்கையே. நம்பிக்கையே பெருஞ்செல்வம் எனலாம்.

இந்த நம்பிக்கை மக்களின் மனத்தில் பாய்ந்து நிறைதல் வேண்டும் நன்குவேர்விடுதல் வேண்டும்; ஆலமரமாய்த்தழைக்க வேண்டும்; வளர்ச்சிக்கு நம்பிக்கை இயைந்த குன்றுமுயற்சி அடிப்படை. முறையான முயற்சியும் நம்பிக்கையும் நம்மைக் கைவிடுதல் இல்லை. முயற்சிக்கு உரிய ஊக்கமும் வேண்டும்; உழைப்பும் வேண்டும். இத்துணையும் "கூடியிருந்து" (திருப் பாவை 27) நிலவுதற்கேற்பவே முயற்சி வெற்றி அளிக்கும். அதன் விளக்கத்தால், குறைந்த செயலொளி பெருகும்; "ஓங்கு பெருஞ்செந்நெல்" (திருப்பாவை, 3) நிறையும்.

இங்ஙனம் உயரிய கடமையில் ஈடுபட்டுழைத்தால் பொருள் வளம் மலியும். இக்குறிக்கோள் தோற்றத்தால்,

> .... "பாற்சோறு
> மூடநெய் பெய்து முழங்கை வழிவார"

உண்ணும் வாய்ப்பினை யாவரும் எளிதில் பெறலாம். சிறிதும் மனங்கலங்காது உழைத்துப் பசியெனல் அறியாது உண்ணு மிடத்தில் கவலை தொலையும். கவலை எழாதபோது தீதில் நெஞ் சம் "குளிர்ந்தது" (திருப்பாவை, 27) சிறக்கும்; உயர்திணையினை வாழ்விக்கும் பண்பாடு பெருநலமுற்று ஓங்கும்; ஆணித்தர மான குறிக்கோளோடு புகழை ஈட்டும்.

தமிழ் வழங்கும் தமிழகம்,

> "எல்லாரு மெல்லாப் பெருஞ் செல்வமு மெய்த லாலே
> இல்லாரு மில்லை யுடை யார்களு மில்லை மாதோ"

(கம்ப ரா. பால. நகரப். 74)

"வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்"
(கம்பரா. பால. நாட்டுப். 58)

என்னும் நன்னிலை எய்துங்கால்,

.... "பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

என்னும் நலம் மலிந்து "நல்லுலக" (தொல். பாயிரம்) மாதல் வேண்டும் என்பதில் ஆண்டாள் தம் கருத்துப் படிந்திருந்தது. இத் தெளிவை ஊட்டித் தமக்கென வாழாத பிறர்க்குரியாளர் வாழ்க்கைக் குறிப்பென இனிமைபயந்து இன்புறுத்துவது, ஆண்டாள் தம் தமிழ்க் கனவின் பொருளுரைக் குறிப்பாகும்.

Rajah of Kalahasti Memorial Third Feeding Charity at Rameswaram Rs. 12,000/-.

This endowment is created by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Kasi mutt, Tirupanandal in memory of Raja Srimathe Raja Raja Damarakumara Venkatappa Naidu Bahadur Varu, Rajah of Kalahasti, who made the gift of Chellur village in Kalahasti Taluk, Chittoor District to our Predecessor-in title Silasri Kasivasi Kumaragurupara Tambiran Swamigal the seventh in the line of succession, in the year 1707 Salivahana Era, corresponding to A. D. 1785 for conducting feeding charity at Rameswaram as long as the Sun and Moon last.

The Government took over the said village under the Estates Abolition Act 1948, and granted an interim compensation of Rs. 9355/- in the year 1955 and we founded an endowment (No. 189) for Rs. 10,000/- in the name of the said Raja of Kalahasti in registered document dated 18 4-1955 for free feeding of Brahmins and poor at Rameswaram.

The Government in 1963 paid an interim payment of Rs. 3529-72 and a final compensation of Rs. 40,029-00 in respect of the said Chellur village in O. P. No. 2040 of 1953 and O. P. No. 134 of 1962 respectively of the Chittoor District Court - Estates Abolition Tribunal-and with that amount we founded an additional endowment No. 334 for Rs. 50,000/- in the name of the said Raja of Kalahasti in document

dated 27-5-1963 and registered on 5-6-1963 for feeding of Brahmins and the poor in our Kasi Mutt building at Rameswaram.

The Government further paid a sum of Rs. 15,161-87 (deficit interim payment of Rs. 13,495-93 and interest Rs. 1665-95) in respect of the said Chellur village in I. A. No. 375 of 1964 and O. P. No. 134 of of 1962 of the Court of District Judge (Estates Abolition Tribunal) of Chittoor and with this amount we founded a second additional endowment (No. 353) for Rs. 20,000/- in the name of the said Raja of Kalahasti in document dated 17-1-1965 and registered on 18-1-1965 for feeding of Brahmins and the poor in our Kasi Mutt building at Rameswaram.

Now the Government have paid a sum of Rs. 5,333—62 as additional final compensation in respect of the said Chellur village in I. A. 177 of 1965 and O. P. No. 2 of 1965 of the Court of District Judge (Estates Abolition Tribunal) of Chittoor and this amount along with the balance of accumulations at credit in the account concerned with this village in our office, viz. a sum of Rs. 12,000/- (Rs Twelve thousand) has now been invested as Fixed Deposit in the State Bank of India, Kumbakonam, and this forms the capital for the Third Additional Endowment made now in the name of the said Raja of Kalahasti for conducting daily feeding of Brahmins and the poor in our Kasi Mutt Building at Rameswaram in addition to the other endowments in force there. This endowment shall be styled as 'Raja of Kalahasti Memorial Third additional Feeding Charity at Rameswaram".

2. The capital of this endowment is Rs.12,000/- as noted below :—

State Bank of India, Kumbakonam. Fixed Deposits:

A. 048759 dated 23-4-1965 for
15 years. Interest @ 7%— Rs. 10,000/-

A. 048714 dated 26-2-1965 for
10 years. Interest @ 7% — Rs. 2,000/-

The administration of this endowment shall vest in us and our Successors-in-interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for the daily feeding of Brahmins and the poor in our Kasi Mutt Choultry, Sannadhi Street at Rameswaram in addition to the other daily feeding charities.

4. The feeding shall be conducted in accordance with the Thitta Japtha (budget) prepared monthly by us and our Successors-in-interest, which will depend upon the income derived and the prices of the commodities then prevailing.

5. The amount may be re-invested from time to time in high interest yielding Securities. This endowment shall not be diverted to any purpose other than that intended herein above. The capital shall always stand in our name and our successors-in-interest.

Tirupanandal
Dated 28-4-1965 } (Sd) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvidamarudur Sub Registrar's Office on 29-4-65 as No. 20 of 1965 Book No. 4. Volume No. 52 pages 281 to 285.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
10515	இலக்கணத்திற் கற்பனைகள்	புலவர் ந. ரா. முருகவேள்
10516	ஒளியும் ஒலியும்	R. K. விஸ்வநாதன், M. A.,
10517	திருஞானசம்பந்த சுவாமிகள் அற்புதங்கள்	தருமபுர ஆதீனம்
10518	கல்வெட்டுத் துணைவன் வினாவிடை	வித்வான் K. M. வேங்கடராமையா
10519	சித்தாந்த சைவ விளக்கக் கட்டுரைகள்	,, ,,
10520	தருக்கஇயல் விளக்கம் (சிவஞான சித்தியார்)	ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,
10521	அறப்பயிற்சி மாலை (முதற் புத்தகம்)	ரா. சண்முகசுந்தரம் செட்டியார்
10522	இலக்கிய வரலாறு (இரண்டாம் பாகம்)	கா. சுப்பிரமணிய பிள்ளை
10523	கால்டுவெல் ஒப்பிலக்கணம் கிரியர்ஸன்	காழி சிவ. கண்ணுசாமி பிள்ளை
10524	கல்வெட்டு மூலமும் விளக்கவுரையும்	வித்வான் வை. சுந்தரேச வாண்டையார்
10525	தமிழகக் கல்வெட்டுகள் ஆராய்ச்சி குறிப்புரைகளுடன்	அடிகளாசிரியர் & கோவிந்தராசனார்
10526	தமிழ் வரலாறு (பிற்பாகம் முதற் பகுதி)	தஞ்சாவூர், K. S. ஸ்ரீநிவாச பிள்ளை
10527	ஸ்ரீமத் பகவத்கீதை வெண்பா	ரெ. சி. நாமதேவ்
10528	திருவையாற்றின் ஏழூர்த் திருவிழா வரலாறும், ஏழூர்த் தேவாரத் திருப்பதிகங்கள் முதலியனவும்	ந. மு. கோவிந்தராய நாட்டார்

10529	திருச்செந்தூர் நிரோட்டக யமக அந்தாதி விரைவுரை	திருச்செந்தூர் ஆறுமுகசுவாமி, தேவஸ்தானம் வெளியீடு
10530	நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத் திரட்டும்	தருமபுர ஆதீனம்
10531	சிவபூஜாவிதி	M. S. துரைசாமி பிள்ளை
10532	திருவெம்பாவை & திருப்பாவை, ஆங்கிலம்	திருவாசகமணி
10533	New Delhi Sree Skanda sasti Celebrations	Souvenir
10534	செந்தலை வரலாறு	S. R. பாலசுப்பிரமணியம்
10535	கோவில் விரட்டானம் (சிழையூர்) ஸ்ரீ பிரகந் நாயகி சமேத ஸ்ரீ வரட்டேஸ்வர தேவஸ்தான ஸ்தல புராணம்	வடிவேல் முதலியார்
10536	சிதம்பர வைபவம் சுருக்கம்	சிதம்பரம் C. S. சச்சிதானந்த தீக்ஷிதர்
10537	தொல்காப்பியம் சொல்லதிகாரம்	,, ,,
10538	தோடுடைய செவியன் எண்ணம் தேவார உரை	திருஞானசம்பந்த நாயனர் சைவ சமய குருகுல வெளியீடு
10539	முத்தமிழ்க் கலாவித்வ ரத்னம் திரு. டி. கே. சண்முகம் அவர்கள் மீது இயற்றிய சித்திர கவிமாலை	P. U. அப்துல் கபூர் சாஹிப் புலவர்
10540	இந்திய தேசியக் காங்ரஸ் 60-வது மகாசபை அக்ராசனர் உரை	யு. என். தேபர்
10541	திருஅருட்பா திருஆயிரம்	சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

(தொடரும்)

திருப்பனந்தாள் — ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

			ரூ.	பை
1	விநாயகர் திருமுறை (அச்சில்)	...		
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3	50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3	00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம் மட்டும் புதிய பதிப்பு)	...	2	75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	...	2	00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1	30
7*	திருவாசகம் ,,	...	0	56
8*	திருக்கோவையார்—பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு)	...	2	90
9	ஒன்பதாம் திருமுறை—திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை	...	1	50
10	,, ,, மூலம் மட்டும்	...	0	56
11	திருமந்திரம் (புதிய பதிப்பு)	...	2	25
12	பதினோருந்திருமுறை (புதிய பதிப்பு) ,,	...	1	50
13	பெரியபுராணம் (மூலம்மட்டும்)	...	3	00
14	பெரியபுராணம் உரை நடை	...	2	00
15	திருத்தொண்டர் புராண சாரம்	...	0	40
16	அகத்தியர் தேவாரத் திரட்டு (அச்சில்)			
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும்	...	3	00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை	...	2	25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1	75
20	கந்த புராணம் — முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும்	...	2	75
21	,, யுத்த தேவ காண்டம் ,,	...	2	00
22	,, தக்ஷகாண்டம் ,,	...	1	50
23	கந்தபுராண உரைநடை ,,	...	3	00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1	50
25	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2	50
26	திருக்குறள் — காமத்துப்பால் ,,			
	ஷை 24. 25, 26. திருக்குறள் 3 புத்தகமும்	...	4	00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0	75
28	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரை	...	1	25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0	25
30	திருக்கைலாய ஞானவுலா — உரையுடன்	...	0	50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	...	0	25
32	கந்தரனுபூதி மூலம்	...	0	13
33	கந்தரனுபூதி தெளிவுரை	...	0	35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன்	...	0	37
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும்	...	0	10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும்	...	0	37
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும்	...	0	50
38	சகலகலாவல்லிமாலை [illegible] ஹிந்தியும் கூடியது	...	0	60

39	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
40	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனுட்சியம்மை குறம்	...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்		1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை	...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
48	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும்	...	0 25
49	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
53	டி டி பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
54	டி டி காமத்துப்பால் டி	...	1 20
55	அபிராமி அந்தாதி-தெளிவுரையுடன்	...	0 50
56	மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
57	திருவாரூர்-திருப்பனுவல்கள்	...	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
59	பழமொழித்திருமுறை	...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50
61	Hymns and Proverbs	...	0 30
62	அப்பர்விழா வெளியீடு	...	0 25
63	நவக்கிரகமாண்பு	...	0 25
64	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும்	...	0 30

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

"தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு.
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- • இக்குறிப்பிடப் பெறறவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறை பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம்-65.